பிரதிநிதிகள் அரசுடன் பேச்சுவார்த்தை நடத்தி பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முன்வர வேண்டும். இந்த அளவுக்கு அரசு துரிதமாக நடவடிக்கை எடுத்துள்ளதாலும், சங்கப் பிரதிநிதிகள் பேசி பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கான வாய்ப்பு இருப்பதாலும், இதை விவாதிக்க அவையின் இதர நடவடிக்கைகளை ஒத்தி வைக்க வேண்டிய அவசியமில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் விளக்கத்திற்குப் பிறகு இதுபற்றி விவாதிக்க, அவையின் இதர நடவடிக்கைகளை ஒத்தி வைக்க வேண்டிய அவசியமில்லையென்று கருதுவதால், இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கான அனுமதியை மறுக்கிறேன்.

(முற்பகல் 10-10)

3. கவன ஈர்ப்பு.

(1) மேல்நிலைப் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கான பணிவிதி முறைகள் வெளியிடப்படாததன் காரணமாக, அவர்களுக்குக் கிடைக்க வேண்டிய ஆண்டு ஊதிய உயர்வு மற்றும் இயல்பான பிற உரிமைகள் கிடைக்காமல் அவதிப்படுவது குறித்து.

திரு. சி. நா. லெட்சுமிகாந்தன் : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, அவசரப் பொதுமுக்கியத்துவம் வாய்ந்த கீழ்க்காணும் நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்களின் கவனத்தை ஈர்க்க விரும்புகிறேன்.

"மேல்நிலைப் பள்ளிகளில் பணிபுரியும் ஆயிரக்கணக்கான ஆசிரியர்களுக்கான பணி விதிமுறைகள் (சர்வீஸ் ரூல்ஸ்) இன்னமும் வெளியிடப்படாததால் அந்த ஆசிரியர்களுக்கான ஆண்டு ஊதிய உயர்வு (இன்கிரிமெண்ட்) மற்றும் இயல்பாகக் கிடைக்க வேண்டிய உரிமைகள் கிடைக்காமல் அவதிப்படுவது குறித்து".

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, இது குறித்து விவர அறிக்கை @ ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

@ 417 ஆக அச்சிடப்பட்டுள்ளது. I ஆம் பக்கத்தில் இணைப்பு

திரு சி. கா. லெட்சுமிகாந்தன் : மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்களால், இது குறித்து ரத்தினச் சுருக்கமான அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப் பட்டுள்ளது. அவ்வறிக்கையில் "மேல்நிலைப் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கான பணி விதிமுறைகள் சம்பந்தப்பட்ட துறைகளுடன் கலந்து முடிவு செய்யப்பட்டு, தேர்வாணைக் குழுவின் குறிப்புகளும் பெறப்பட்டுள்ளன. இது வெகு விரைவில் வெளியிடப்படும்" என்று சொல்லப்பட்டிருக்கிறது. இதில் 'வெகு விரைவில்' என்று பயன்படுத்தப்பட்ட சொற்றொடருக்குப் பதில் ஒரு குறிப்பிட்ட காலத்தையே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நிர்ணயித்துக் குறிப்பிட்டால் நன்றாக இருக்கும். விவர அறிக்கையின்படி, அநேகமாக எல்லா வேலைகளும் முடிந்துவிட்டன என்பது புலனாகிறது. எனவே, வெகு விரைவில் என்பதற்குப் பதில் ஒரு குறிப்பிட்ட தேதியில் வெளியிடுவோம் என்று அறிவித்தால், அது எங்களுக்கு மனநிறைவு அளிக்கக் கூடியதாக இருக்கும். 'வெகு விரைவில்' என்று சொல்லப்படும் வார்த்தைகள் பல சமயங்களில் பல பொருளைக் கொடுக்கின்றன. எனவே ஒரு குறிப்பிட்ட தேதியை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிக்க முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, மேல் நிலைப் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்களுக்குத் தற்போது பணிமூப்புப் பட்டியல் வெளியிடப்படாமலேயே இருக்கிறது. அதன் காரணமாகவும் பல பிரச்சினைகள் உருவாகின்றன. எனவே, வரும் ஆண்டிலாவது மேல் நிலைப் பள்ளிகளில் பணியாற்றும் அனைத்து ஆசிரியர்களுக்குமான பணிமூப்புப் பட்டியலை வெளியிட அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, ஒரு கோரிக்கையைப் பற்றி எழுந்த கவன ஈர்ப்புத் தீர்மானம் இது. அக்கோரிக்கை நிறைவேறுகிற வகையில் நிலைமைகள் இருப்பதால், அது நிறைவேறப் போகிறது என்று "ரத்தினச் சுருக்கமாக" நான் இங்கே குறிப்பிட்டிருக்கிறேன். கோரிக்கை நிறைவேறவில்லை என்றால், ஒரு நான்கு பக்கத்திற்குக் காரணங்களை எழுதி அதை இங்கே படித்திருக்கலாம். ஆனால், நடைபெறுகிறது அல்லது நிறைவேறுகிறது என்ற ரத்தினச் சுருக்கமான செய்தி மாண்புமிகு உறுப்பினர்களுக்கு மகிழ்ச்சியளிக்கக்கூடியதாக இருக்கும் என்று அந்த வகையில்தான் ஏற்றுக்கொள்ள வேண்டும். வெகு விரைவில் என்று சொல்லப்பட்டிருப்பதைக் குறிப்பிட்டுக் கேட்டிருக்கிறார்கள். அநேகமாக

மேல்நிலைப் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கான பணி விதிமுறைகள் வெளியிடப்படாததன் காரணமாக, அவர்களுக்குக் கிடைக்க வேண்டிய ஆண்டு ஊதிய உயர்வு மற்றும் இயல்பான உரிமைகள் கிடைக்காமல் அவதிப்படுவது குறித்து

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எதிர்பார்க்கிற காலத்திற்குள் அது கிடைத்து விடும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். . . . காரணம் அந்தக் கோப்பு எந்த இடத்திலிருக்கிறது என்பது எனக்குத் தெரியாது. என்னிடத்திலிருந்தால் இப்போதே கையெழுத்துப் போட்டு, நிறைவேறிவிட்டது என்று சொல்லி யிருப்பேன்.

திரு. சோ ஆறுமுகம்: தலைவர் அவர்களே, ஆன் எ பாயிண்ட் ஆப் ஆர்டர். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதிலளிக்கும்போது "இல்லை" என்பதற்கு நீண்ட அறிக்கையைக் கொடுத்திருப்பேன் என்று குறிப்பிட்டார்கள். அப்படியானால், இனி நீண்ட அறிக்கைகள் தரப்பட்டால் கோரிக்கைகள் நிறைவேறாது என்று எடுத்துக் கொள்ளலாமா? (சிரிப்பு)

மாண்புமிகு மேலவைத் தலைவர்: அதை நகைச்சுவையாகத்தான் அனுபவிக்க வேண்டும்.

திரு. பா. ரா. தாமஸ்: இத்தகைய பணி விதிமுறைகள் வெளியிடப் படும்போது, இப்போது "ஈர்க்கப்பட்டுள்ள பட்டதாரி ஆசிரியர்களுக்கு" அவர்கள் தற்போது பெற்றுவரும் சிறப்பு ஊதியத்தைச் சேர்த்துக் கணக்கில் எடுத்துக் கொண்டு ஊதியத்தை நிர்ணயிக்க வேண்டும் என்று அரசு உத்தர விடுமா? அதாவது முதுகலைப் பட்டம் பெறும்போது இத்தகைய ஆசிரியர்கள் பெற்றுவரும் ஊக்க ஊதியத்தையும் இணைத்தே, அவர்களின் ஊதியம் நிர்ணயிக்கப்படும் வகையில் விதிமுறையில் திருத்தம் செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: இதைத் தனியாகத்தான் பரிசீலனை செய்ய வேண்டும். மற்றபடி பணிமூப்புப் பட்டியலைப்பற்றிக் கேட்டிருக் கிறார்கள். அது குறித்து அரசு நடவடிக்கை எடுக்கும்.

திரு. க. மீனாட்சிசுந்தரம்: "வெகு விரைவில்" என்பதைப்பற்றிக் குறிப்பிடுவதற்கு ஒரு காரணம் உண்டு. சென்ற முறை சட்டமன்றக் கூட்டத் தொடர் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இது குறித்து பதிலளிக்கும்போது அது "வெகு விரைவில்" வெளியிடப்படும் என்று கூறினார்கள். அதுகூட, அடுத்த கூட்டத்தொடர் தொடங்குவதற்கு முன்னாலேயே இது நடைபெறும் என்று சொல்லியிருக்கிறார்கள். அதுமட்டு மல்ல. சென்ற வாரம் ஒரு கவன ஈர்ப்புத் நீர்மானத்திற்குப் பதிலளிக்கும் போதும்கூட "வெகு விரைவில் அது வெளியிடப்படும்" என்று குறிப்பிட்டார்.

1981 மார்ச் 26] *[திரு. க. மீனாட்சிசுந்தரம்]*

ஆக இப்படியே "வெகு விரைவில்" என்று சொன்னால், நீண்டகாலம் ஆகுமோ என்ற எண்ணம் ஏற்படுகிறது. எனவே, இத்தகைய எண்ணத்தை மாற்றும் வகையில் இந்த விதிமுறைகள் மார்ச் மாத இறுதிக்குள் அல்லது எப்ரல் திங்கள் முதல் வாரத்திற்குள் வெளியிடப்படும் என்று ஒரு நிர்ணயித்த காலத்தை அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : வெகு விரைவில் என்று சொல்லும் போது, மாண்புமிகு உறுப்பினர்களின் உணர்வோடு கல்வித் துறையைச் சார்ந்த நாங்களும் ஒன்றி ஈடுபடுகிறோம் என்றுதான் எடுத்துக்கொள்ள வேண்டும். தேர்வாணைக் குழு என்பது எங்கள் கட்டுப்பாட்டிலோ, எங்கள் அதிகாரத்திற்கு உட்பட்டோ இல்லை. அங்கிருந்து வெகு விரைவில் வர வேண்டும் என்றுதான் நடவடிக்கைகளை மேற்கொள்கிறோம். அங்கே காலதாமதமாகும்போது, எங்களைப் போன்றவர்களை அதற்குப் பொறுப் பாக்குகிற முறையில் கேள்வி இருக்கக்கூடாது என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். எனவே இது விரைவில் வெளியிடப்பட வேண்டும் என்பதிலும் அதன் மூலம் இந்தப் பிரச்சினை விரைவில தீர்க்கப்பட வேண்டும் என்பதிலும், மாண்புமிகு உறுப்பினர்களுக்கு இருக்கிற ஆர்வத்திலும் அக்கறையிலும் எங்களுக்குக் கருத்து வேறுபாடோ மாறுபாடோ இல்லை என்பதை மட்டும் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. செ. முத்துசாமி: மாண்புமிகு தலைவர் அவர்களே, ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர். இந்த அறிக்கையில் சொல்லும்போது, தேர்வாணைக் குழுவிலிருந்து வந்துவிட்டதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இப்போது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லும்போது, அது தேர்வாணைக் குழுவில் இருப்பதைப்போல சொல்கிறார்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தயவுசெய்து உட்கார வேண்டும். இதில், எந்த பாயின்ட் ஆப் ஆர்டரும் இல்லை. ஒரு உறுப்பினர் பேசினார் என்றால், தொடர்ந்து ஒவ்வொரு உறுப்பினரும் 'பாயின்ட் ஆப் ஆர்டர்' என்ற பெயரில் எதையாவது சொல்வது முறையல்ல. மாண்புமிகு உறுப்பினரை நான் இப்போது அனுமதிக்க வில்லை. தயவுசெய்து உட்கார வேண்டும்.

மேல்நிலைப் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கான பணி விதிமுறைகள் வெளியிடப்படாததன் காரணமாக, அவர்களுக்குக் கிடைக்க வேண்டிய ஆண்டு ஊதிய உயர்வு மற்றும் இயல்பான உரிமைகள் கிடைக்காமல் அவதிப்படுவது குறித்து

[1981 மார்ச் 26

திரு. செ. முத்துசாமி: மாண்புமிகு தலைவர் அவர்கள் ஒரு உறுப்பினரை மட்டும் அனுமதித்துவிட்டு நான் 'பாயின்ட் ஆப் ஆர்டர்' எழுப்பும்போது உட்கார வேண்டும் என்று சொல்வது முறைதானா? ஒவ்வொரு முறையும் என்னை இப்படிச் சொல்வது வேதனை அளிக்கிறது. அதோடு எப்போது பார்த்தாலும் எங்களின் பேச்சிற்கு மாண்புமிகு தலைவரவர்கள் நோக்கம் கற்பிக்கிறார்கள். எல்லாப் பிரச்சினையிலும் பேசுவதற்கு ஆசிரியர்களுக்குத் தகுதியில்லை என்று சொல்வதுபோல் எங்களைக் கேவலப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். எனவே இதைக் கண்டிக்கும் வகையில் நான் அவையிலிருந்து வெளிநடப்பு செய்கிறேன்.

(உறுப்பினர் அவையிலிருந்து வெளியேறினார்)

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு உறுப்பினர் திரு. முத்துசாமி அவர்கள் எழுப்பிய வினாவிற்கு நான் விளக்கம் அளிக்க விரும்புகிறேன். இப்போது "தேர்வாணைக் குழுவிலிருந்து வரவில்லை" என்று நான் சொல்லவில்லை. அறிக்கையிலேயே தெள்ளத் தெளிவாக தேர்வாணைக் குழுவிலிருந்து குறிப்புகளும் பெறப்பட்டுள்ளன என்று சொல்லிவிட்டு, இன்னும் தேர்வாணைக் குழுவிலிருந்து அவைகள் பெறப்படவில்லை என்று எப்படிச் சொல்ல முடியும்? மாண்புமிகு உறுப்பினர் திரு. மீனாட்சிசுந்தரம் அவர்கள் அன்றைக்குக் கேட்டபோது, அப்போது தேர்வாணைக் குழுவிலிருந்து வரவில்லை என்று குறிப்பிட்டேன். எனவே இப்போது நான் தேர்வாணைக் குழுவிலிருந்து அது வரவில்லை என்று குறிப்பிட்டதாகச் சொல்வது சரியல்ல. மாண்புமிகு உறுப்பினர்கள் தயவுசெய்து நாங்கள் சொல்வதைக் கொஞ்சம் பொறுமையோடு கேட்க வேண்டும். தேர்வாணைக் குழுவிலிருந்தும் குறிப்புகள் பெறப்பட்டுள்ளன என்று என்னுடைய அறிக்கையிலேயே நான் விளக்கமாகச் சொல்லியிருக்கிறேன். அதை நான் மறுக்கவில்லை. போன தடவை மாண்புமிகு உறுப்பினர் திரு. மீனாட்சிசுந்தரம் அவர்கள் கேட்ட போது, தேர்வாணைக் குழுவிலிருந்து வரவில்லை என்று குறிப்பிட்டேன்.